பக்கங்கள்

Registered as a Newspaper

உதயன்

அன்பளிப்பு விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 29 வெள்ளிக்கிழமை (15-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 19

# ராணுவ பிடிக்குள் மக்களை சிக்க வைக்க அரசு தந்திரம்!

## மட்டக்களப்பில் படையினர் சூடு மீனவர் பலி

மட்டக்களப்பில் மீன்பிடிப்பதற்காக வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற ...கந்தசாமி என்பவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

படையினர் இவரைச் சுட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## மக்களைப் பட்டினி போட அரசு முயற்சிக்கிறது

### லோறன்ஸ் திலகர் குற்றச்சாட்டு

லண்டன், டிச. 15

"தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் இராணுவ வசமுள்ள பகுதிகளுக்குத் திரும்பவேண்டும் என்பதற்காக அவர்களைப் பட்டினிபோட ஸ்ரீலங்கா அரசு முயற்சிக்கிறது."

விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகப் பொறுப்பாளர் திரு. லோறன்ஸ் திலகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மக்கள் இராணுவத்தின் வசமுள்ள பகுதிகளுக்குத் திரும்பவேண்டும் என்பதற்காக அவர்களை பட்டினி போட ஸ்ரீலங்கா அரசு முயற்சிக்கிறது. இராணுவ வசமுள்ள பகுதிகளுக்கு மீண்டும் செல்லக்கூடிய ஒரு நிலையில் மக்கள் இல்லை. ஏனெனில் கடந்த வாரம் மட்டக்களப்பில் நடந்ததை மக்கள் அறிவார்கள் என்றும் திலகர் கூறினார். (இ-7)

## விழிப்பாக இருக்க புலிகள் எச்சரிக்கை

சாவகச்சேரி, டிசம்பர். 15

இராணுவத்தின் பிடியில் மக்களைச் சிக்க வைத்து, யாழ்ப்பாணத்தில் இராணுவ நிர்வாக ஆட்சியை நடத்த சந்திரிகா அரசு திட்டமிட்டுள்ளது.

சந்திரிகாவின் இந்தத் தந்திரம் குறித்து எமது மக்கள் மிகவும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

— இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்துறை நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்ட வரலாறு என்றுமில்லாதவாறு இன்று புதிய நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்கொண்டு நிற்கிறது. இன ஒடுக்குதலின் தாங்கொணாப் பெரும் பளுக்கள், நாளுக்கு நாள் தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டு வருகின்றன. தமிழரின் போராட்ட உறுதிப்பாட்டை உடைத்து, அவர்களை அடிமைகொண்டு ஆள வேண்டும் என்பதில் சிங்களப் பேரினவாதம் வெறிகொண்டு நிற்கிறது.

## புலிகளின் நுட்பமான உத்தியினால் சந்திரிகாவின் கனவு பலிக்கவில்லை

பெரும் செலவில், பெரும் படைதிரட்டி, பெரும் உயிரிழப்பைச் சந்தித்து, மக்களற்ற மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கிறது. வெறிச்சோடிக் கிடக்கும் யாழ்ப்பாண நகரில், அழிவுகளுக்கும், சிதைவுகளுக்கும் மத்தியில் சிங்கள இனவாத ஆதிக்கத்தின் சின்னம் பறக்கவிடப் பட்டிருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பு நிகழ்வுக்கு சிங்கள அரசு, கொழும்பில் வெற்றிவிழா எடுத்து வருகிறது. சிங்கள மக்களை ஏமாற்றும் அரசியல் நாடகமாக இவ் வெற்றிவிழாக்கள் அரங்கேற்றப்பட்ட போதும் தமது இராணுவப் படையெடுப்பின் அரசியற் குறிக்கோள் நிறைவு காணவில்லை என்பது சிங்கள ஆட்சியாளருக்குத் தெரியாததல்ல. புலிகளைத் தோற்கடித்து, தமிழரை அடிமைகொண்டு, தமிழரின் வரலாற்றுப் பெருமைமிக்க மண்ணில் சிங்கள அரச நிர்வாகத்தை நிறுவிடும் சந்திரிகாவின் கனவு பலிக்கவில்லை. மக்களின் இடம்பெயர்வும், புலிகளின் நுட்பமான போர் உத்திகளும் அரசின் அடிப்படை நோக்குகளை சிதறடித்து விட்டன.

## தமிழ், சிங்கள தேசங்கள் இடையே என்றுமில்லாத பெரும் பிளவு நிலை

தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்புப் போரின் முதலாவது கட்டம் தோல்வியில் முடிந்திருக்கிறது. தமிழ் மக்களை இலட்சக்கணக்கில் தமது சொந்த இடங்களிலிருந்து குடிபெயர்த்தி, அவர்களுக்குப் பெரும் அவலத்தையும், துயரத்தையும் ஏற்படுத்தியதைத் தவிர, சந்திரிகா அரசு வேறு எதையும் சாதித்துவிடவில்லை. இதன் விளைவாக, கொழும்பு அரசு தமிழரின் தேசிய ஆன்மாவில் ஆழமான வடுவை ஏற்படுத்தியிருக்கிறது. அத்தோடு, தமிழ்,சிங்கள தேசங்கள் மத்தியில் என்றுமில்லாத பெரும் பிளவையும் உருவாக்கியுள்ளது.

யாழ்ப்பாணப் படையெடுப்பின் முதலாம் கட்டத் தோல்வியை சரிக்கட்டும் நோக்கில் இரண்டாம் கட்ட நடவடிக்கையை ஆரம்பிக்க அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த இரண்டாம் கட்ட நடவடிக்கையின் நோக்கம் என்ன என்பதையும் அரசாங்கம் பகிரங்கமாகவே தெரிவித்திருக்கிறது. யாழ்ப்பாண மண்ணில் மக்களை மீண்டும் குடியமர்த்தி சிங்கள அரச நிர்வாகத்தை நிறுவுவதே இரண்டாம் கட்டத்தின் பிரதான நோக்கமென அறிவித்திருக்கிறது.

## வலிகாமத்தை சிறைகூடமாக்கி விட்டு மக்களை அழைக்கின்றார் சந்திரிகா!

எந்த இராணுவத்திற்குப் பயந்து, பாதுகாப்புத் தேடி, யாழ். மண்ணைவிட்டு மக்கள் வெளிநடப்புச் செய்தார்களோ அந்த இராணுவத்தின் பிடியில் மக்களைச் சிக்க வைத்து, யாழ்ப்பாணத்தில் இராணுவ நிர்வாக ஆட்சியை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் அடிப்படையிலேயே, மக்களை யாழ்ப்பாணம் திரும்புமாறு சந்திரிகா அழைப்பு விடுக்கிறார். யாழ்ப்பாண நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நாற்பதாயிரம் துருப்புக்களை குவித்து வைத்து, வீதிக்கு வீதி காவலரண்களை அமைத்து, கிராமங்களைச் சூழ முள்ளுக்கம்பி வேலிகளை நிறுவி, வயல்கள் தோட்டங்களில் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்து, பிரமாண்டமான ஒரு சிறைக்கூடமாக வலிகாமத்தை மாற்றியமைத்து, ஊருக்குத் திரும்புமாறு யாழ்ப்பாண மக்களுக்கு நேசக்கரம் நீட்டுகிறார் சந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக் கடற் பகுதியில் படையினர் பீரங்கித் தாக்கு

வடமராட்சி, டிச. 15

வடமராட்சி வடக்கு கடல் பகுதியில், ஸ்ரீலங்கா கடற் படையினர் நேற்றுக் காலை பீரங்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, சக்கோட்டை கடல் பகுதிகளிலும் குடிமனைப் பகுதிகளிலும் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இத்தாக்குதல்கள் காரணமாக மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்களை கடலிலேயே கைவிட்டு அவசரமாகக் கரை திரும்பினர். (இ-173-15)

## பொலீஸ் நிலையம் மீது பள்ளிக்குடாவில் தாக்குதல்

கொழும்பு, டிச. 14

ஏறாவூரில் உள்ள பள்ளிக்குடா பொலீஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இச் சம்பவம் இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

உழவு இயந்திரம் ஒன்றில் வந்தே புலிகள் தாக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## அரச ஊழியரின் சம்பளத்தை பணமாக வழங்குவதில் நெருக்கடி

சாவகச்சேரி, டிச. 15

அரச ஊழியர்களின் டிசம்பர் மாதச் சம்பளத்தை பணமாக வழங்குவதில் உள்ள நெருக்கடி குறித்து ஆராய இன்று பிற்பகல் 2.30 மணிக்கு செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தலைமையில் நடக்கும் இக் கூட்டத்தில் கல்வித்திணைக்களம், பல்கலைக்கழகம், போதனா வைத்தியசாலை, தபால் திணைக்களம், வங்கிகள் ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்து கொள்வர்.

திரவப் பணத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையடுத்து. —

டிசம்பர் மாதச் சம்பளத்தை வழங்க தேவையான திரவப்பணத்தை வவுனியாவில் இருந்து எடுத்துவருவது குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படும்.

ஓய்வூதியர்களின் டிசம்பர் மாதக் கொடுப்பனவு குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப் படவிருக்கிறது.

இதற்கிடையில் அரசாங்க துறையைச் சேர்ந்தவர்களுக்கான டிசம்பர், ஜனவரி மாதச் சம்பளங்கள் யாழ். நகரில் உள்ளவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும் என இன விவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் மேலதிக செயலாளரும், வடக்கில் நிவாரணப் பணிகளுக்கான ஒழுங்கிணைப்பு அதிகாரியுமான எம். எம். ஜே செனவிரத்ன தெரிவித்த தாக இலங்கை வானொலி நேற்று செய்தி வெளியிட்டது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் தருமகுலசிங்கம்

சரவணை கிழக்கை பிறப்பிடமாகவும், 36/215, மகாவித்தியாலய மாவத்தை, கொழும்பு - 12 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தருமகுலசிங்கம் 08-12-1995 அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியின் மகனும், மோகனாம்பிகையின் அன்புக் கணவரும், லிஷாந்தன், துஷாந்தன், திவ்வியா ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகம்மா, சிவயோகம் (கனடா), புஸ்பராணி, தர்மராஜா (சுவிஸ்), வர்ணகுலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் 09-12-95 சனிக்கிழமை காலை 10 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக மாதம்பிட்டிய மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மு. நல்லதம்பி

சூட்டி,
497, நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.
(யூனியன் பேக்கறிக்கு அருகாமையில்) (39521)

## இளையகுட்டி கந்தையா

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி கந்தையா நேற்றுக் காலமாகி விட்டார்.

இவர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், கமலாபதி, சரஸ்வதி, செல்வநாயகம், திலகவதி, புஸ்பவதி, அருமைநாயகம் (சாவ. ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புதசிங்கம், யோகராணி, சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாந்தி, ரவீந்திரராசா, அருள்ரஞ்சன், பிரசாந்தன், பவசுதன், டிசாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(15-12-95) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
அருமைநாயகம்
(மகன்)
(மனேஜர் - கிளை இல. 08)

மட்டுவில்.
(39519)

## திருமதி மகேஸ்வரி கந்தசாமி

அரியாலை மேற்கு, 9/1 இலந்தைக்குளம் வீதியை சேர்ந்தவரும், தற்போது கேடில்ஸ் நகர் (புதிய வீடமைப்புத்திட்டம்) கெற்பலியில் வசித்தவருமான திருமதி மகேஸ்வரி கந்தசாமி 14-12-95 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா கந்தசாமியின் அன்பு மனைவியும், சிவரூபனின் (நோர்வே) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தம்பு — பாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், மயில்வாகனம் (ஓய்வு பெற்ற மின்சார அத்தியட்சகர்), காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் சண்முகசுந்தரம் (செட்டி), புவனேஸ்வரி ஆகியோரின் பிரிய சகோதரியும், ஓய்வு பெற்ற ஆசிரியர் சு. மனோகரனின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கெற்பலி இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக இன்று 15-12-95 பிற்பகல் 3 மணியளவில் கெற்பலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மயில்வாகனம்
(பாலசுந்தரம்)

கேடில்ஸ் நகர்,
கெற்பலி (39520)

## சாமுவேல் குணரத்தினம்

[கிளாக்கர்]

காரைநகர் மல்லிகையைச் சேர்ந்த சாமுவேல் குணரத்தினம் 26-10-1995 இல் காரைநகரில் காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் காரைநகரில் நடைபெற்றன என்பதனை உற்றாா, உறவினர். நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
குலேந்திரன் (மகன்)
தபாலகம், காரைநகர்
மகேந்திரன் (மகன்)

முதலியார் வீதி
பெருங்குளம் சந்தி
சாவகச்சேரி. (39635)

## சின்னத்தம்பி சுகிர்தா (பாரதி)

நீர்வேலிச் சந்தி கராஜ் உரிமையாளர் சின்னத்தம்பியின் (கிட்டு) மகள் சுகிர்தா (பாரதி) 13-12-95 இல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் முத்துக் கிருஸ்ணன் இல்லத்தில் 15-12-95 அன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. சின்னத்தம்பி
[கிட்டு]

(39518)

## மலாயன் சிங்கப்பூர் ஓய்வூதியம்

நவம்பர் மாதத்துக்குரிய மலாயன், சிங்கப்பூர் ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு நேரடியாக யாழ்ப்பாணக் கச்சேரியினால் அனுப்பப்பட்டுள்ளன என்றும் சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் அந்தந்த வங்கிகளுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது. (இ)

## பொது சன உதவிப் பணம் இன்று முதல்

மாதாந்த பொதுசன உதவிப் பணம்பெறுவோருக்கான ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்பட உள்ளன.

இடம் பெயர்ந்து தற்சமயம் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ளபொது சன உதவிப்பணம் பெறுவோருக்கான கொடுப்பனவுகள் அவர்கள் தங்கியுள்ள பிரிவு தபாலகங்கள் அல்லது உப தபாலகங்களினூடாக வழங்கப்படும் என யாழ் .அஞ்சல் அதிபர் திரு. கோடீஸ்வரன் தெரிவித்தார். (இ-7)

## யாழ். நகரில் "பிரிகேட்" தலைமையகம்

கொழும்பு, டிச, 15

ஸ்ரீலங்கா இராணுவத்தின் முதலாவது 'பிரிகேட்' தலைமையகம் நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

மேஜயர் ஜெனரல் கே.வீரசூரியா இந்த அலுவலகத்தை திறந்து வைத்தார். (இ-3)

## அதிபர்கள் சந்திப்பு

தென்மராட்சிக் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான அவசர சந்திப்பு ஒன்று இன்று பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ).

## அறிவித்தல்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

மருத்துவபீடம்

மூன்றாம் மருத்துவமாணி பகுதி 11 (மீள்) பரீட்சை, இறுதி மருத்துவமாணிப் பரீட்சை

11-12-1995 ஆம் திகதி நடைபெறவிருந்த மூன்றாம் மருத்துவமாணி பகுதி 11 (மீள்) பரீட்சை 8-1-1996 ஆம் திகதியும், 20-11-1995 ஆம் திகதி நடைபெறவிருந்த இறுதி மருத்துவமாணிப் பரீட்சை 29-1-1996 ஆம் திகதியும் ஆரம்பமாகவிருக்கின்ன.

மேற்படி பரீட்சைகளுக்கு தோற்றுவதற்குத் தகுதியான மாணவர்கள் 1-1-1996 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உப அலுவலகத்தில் தமது பரீட்சைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர்.

துணைவேந்தர்

14-12-95. (இ-3144)

## உடன் சந்திக்கவும்

பழம் றோட் சுந்தர்மடத்தைச் சேர்ந்த செல்லையா பாக்கியம், யோகராசா சசிகலா ஆகியோரை, அரசடி வீதி, சுந்தர்மடத்தைச் சேர்ந்த ஜெகநாதன் மாஸ்ரர் தேடுகிறார்.

C/O திருமதி. S. பரமேஸ்வரி
(நல்லக்கா)
ஐயா கடை ஒழுங்கை,
மீசாலை வடக்கு.

(39516)

## நீங்கள் தேடிக் கொண்டிருப்பவை இவைதானே?

## விற்பனைக்கு

புதிய, மிக நல்ல நிலையிலுள்ள பின்வரும் பொருள்கள் விற்பனைக்கு உண்டு.

1. ஜெனரேற்றர் (ரொபின் 1500 W)
2. வோக்மன்
3. ஓர்கன் (காசியோ SA 21 100 SOUND)
4. குழந்தைகளுக்கான இரண்டுசில்லு சைக்கிள்
5. பெண்களுக்கான துவிச்சக்கர வண்டிகள்
6. ஒலிப்பதிவு நாடாக்கள்

★ 16-12-95 அன்று மாத்திரமே பொருள்களைப் பார்வையிடவும் கொள்வனவு செய்யவும் முடியும்

★ தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

திரு. சி. சங்கரப்பிள்ளை
(ஆசிரியர்)
குருந்தட்டி,
நெல்லியடி,
கரவெட்டி.

(39522)

# மரண அறிவித்தல்கள்

## யூகபாணி ஜெககணேஸ்வரன்

(ஜெகன்)

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் சுவிஸில் (Swiss) வசித்து வந்தவருமாகிய ஜெககணேஸ்வரன் 1. 12. 95 இல் காலமாகி விட்டார்.

இவர் யூகபாணி - மகிழ்மலர் தம்பதியினரின் அன்பு மகனும், சுபாசினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சசிகலா, விஜிகலா (லண்டன்), ரதிகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மினி (லண்டன்), மோகன்ராஜ் (லண்டன்), தேவராஜ் (லண்டன்), சாந்தினி (லண்டன்), பவானி (கனடா), ரஜினி (கொழும்பு), ரங்கராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 7. 12. 95 இல் லண்டனில் நடைபெற்றன.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. யூகபாணி

தற்காலிக முகவரி:
C/O V. இராசரத்தினம்
எருவன்
(சேரன் கழஞ்சிய வடக்கு ஒழுங்கை)
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம். (39517)

## திருமதி கனகசபை திலகவதி

(நயினாதீவு)

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கனகசபை திலகவதி 12-12-95 இல் நயினாதீவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வ. கனகசபையின் அன்பு மனைவியும், நற்குணசிங்கம் (C.T.B. கோண்டாவில்), நல்லம்மா, நாகலெட்சுமி, புஸ்பவதி (ஆசிரியை, வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பேரின்பநாயகி (ஆசிரியை யா/கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), தியாகராசா (உதவி அரசாங்க அதிபர் - நயினாதீவு), சிவசோதி (வர்த்தகர்), ஜெயபாலசிங்கம் (வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-12-95 இல் நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவசோதி
(மருமகன்)

தற்காலிக முகவரி:
பெரிய அரசடி,
Teacher's Lane,
சங்கத்தானை,
சாவகச்சேரி, (39634)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு பெறுவோரின் கடன் பத்திர இலக்கங்கள்

தமிழீழ மீட்பு நிதிக்கடனில் 1995 ஆம் ஆண்டு மீளளிப்புக்காக மூவாயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

மீட்பு நிதிக்கடன் மீளப் பெறுவோரின் கடன் பத்திர இலக்கங்கள் பிரிவு ரீதியாக வருமாறு:-

## காரைநகர்

யா/கா

| | | |
|---|---|---|
| 27 | 29 | 53 |
| 92 | 125 | 132 |
| 141 | 195 | 274 |
| 327 | 371 | 403 |
| 425 | 434 | 438 |
| 528 | 592 | 616 |
| 729 | 751 | 828 |
| 872 | 879 | 884 |
| 895 | 896 | 900 |
| 908 | 914 | 918 |
| 923 | 954 | 964 |
| 975 | 998 | 1000 |
| 1013 | | |

## வேலணை

யா / வே

| | | |
|---|---|---|
| 47 | 51 | 104 |
| 149 | 152 | 165 |
| 220 | 221 | 224 |
| 233 | 271 | 276 |
| 343 | 354 | 357 |
| 361 | 401 | 433 |
| 540 | 562 | 588 |
| 597 | 635 | 651 |
| 692 | 723 | 818 |
| 835 | 897 | 937 |
| 946 | 996 | 1005 |
| 1088 | 1090 | 1099 |
| 1114 | 1118 | 1140 |
| 1172 | 1194 | 1222 |
| 1264 | 1271 | 1293 |
| 1346 | 1399 | 1409 |
| 1415 | 1431 | 1440 |
| 1451 | 1482 | 1484 |
| 1499 | 1515 | 1524 |
| 1597 | 1613 | 1618 |
| 1758 | 1788 | 1791 |
| 1828 | 1833 | 1853 |
| 1885 | 1934 | 1935 |
| 1984 | 2004 | 2012 |
| 2034 | 2069 | 2099 |
| 2135 | 2154 | 2189 |
| 2209 | 2246 | 2247 |
| 2373 | 2390 | 2435 |
| 2437 | 2439 | 2445 |
| 2462 | 2485 | 2510 |
| 2544 | 2574 | 2577 |
| 2588 | 2594 | 2598 |
| 2605 | 2624 | 2635 |
| 2683 | 2696 | 2697 |
| 2718 | 2719 | 2744 |
| 2750 | 2776 | 2810 |
| 2861 | 2885 | |

## வெளியகல்வு

யா/வெ

| | | |
|---|---|---|
| 02 | 04 | 07 |
| 12 | 15 | 19 |
| 21 | 24 | 25 |
| 27 | 28 | 29 |
| 34 | 38 | 44 |
| 45 | 47 | 54 |
| 55 | 61 | 63 |
| 64 | 65 | 70 |
| 71 | 73 | 75 |
| 78 | 79 | 86 |
| 95 | 96 | 100 |
| 104 | 108 | 111 |
| 113 | 121 | 124 |
| 128 | 133 | 142 |
| 144 | 147 | 148 |
| 150 | 156 | 162 |
| 176 | 177 | 179 |
| 180 | 181 | 189 |
| 197 | 202 | 207 |
| 208 | 209 | 212 |
| 213 | 214 | 217 |
| 221 | 232 | 234 |
| 236 | 237 | 239 |
| 243 | 248 | 250 |
| 252 | 253 | 254 |
| 255 | 257 | 260 |
| 262 | 271 | 272 |
| 275 | 277 | 279 |
| 283 | 285 | 286 |
| 290 | 291 | 297 |
| 302 | 305 | 306 |
| 314 | 322 | 324 |
| 329 | 332 | 336 |
| 347 | 354 | 355 |
| 366 | 370 | 377 |
| 378 | 383 | 387 |
| 392 | 393 | 394 |
| 396 | 403 | 419 |
| 422 | 425 | 430 |
| 436 | 437 | 438 |
| 441 | 442 | 447 |
| 454 | 456 | 460 |
| 463 | 465 | 466 |
| 467 | 470 | 472 |
| 473 | 476 | 477 |
| 479 | 480 | 483 |
| 484 | 488 | 489 |
| 490 | 493 | 501 |
| 502 | 507 | 515 |
| 516 | 518 | 523 |
| 524 | 526 | 527 |
| 529 | 531 | 532 |
| 540 | 541 | 543 |
| 544 | 548 | 549 |
| 553 | 556 | 557 |
| 562 | 570 | 572 |
| 574 | 577 | 582 |
| 596 | 598 | 603 |
| 604 | 605 | 607 |
| 626 | 628 | 633 |
| 634 | 640 | 650 |
| 651 | 653 | 659 |
| 670 | 672 | 679 |
| 681 | 682 | 685 |
| 686 | 697 | 700 |
| 701 | 702 | 707 |
| 708 | 710 | 720 |
| 721 | 726 | 732 |
| 733 | 734 | 736 |
| 739 | 740 | 741 |
| 743 | 744 | 745 |
| 748 | 749 | 750 |
| 751 | 756 | 758 |
| 767 | 770 | 773 |
| 774 | 775 | 776 |
| 777 | 789 | 790 |
| 791 | 795 | 799 |
| 802 | 805 | 807 |
| 809 | 810 | 820 |
| 822 | 825 | 826 |
| 830 | 833 | 834 |
| 839 | 844 | 846 |
| 852 | 854 | 856 |
| 857 | 859 | 860 |
| 863 | 867 | 869 |
| 870 | 874 | 876 |
| 878 | 881 | 884 |
| 885 | 889 | 892 |
| 895 | 898 | 900 |
| 901 | 906 | 907 |
| 910 | 912 | 913 |
| 914 | 917 | 920 |
| 921 | 935 | 936 |
| 937 | 940 | 941 |
| 951 | 953 | 954 |
| 960 | 963 | |
| 965 | 968 | 969 |
| 970 | 972 | 973 |
| 974 | 976 | 978 |
| 981 | 983 | 986 |
| 987 | 989 | 990 |
| 994 | 999 | 1003 |
| 1005 | 1008 | 1011 |
| 1012 | 1014 | 1015 |
| 1017 | 1018 | 1020 |
| 1021 | 1022 | 1023 |
| 1024 | 1025 | 1028 |
| 1030 | 1032 | 1034 |
| 1035 | 1042 | 1043 |
| 1046 | 1051 | 1055 |
| 1058 | | |
| 1064 | 1065 | 1068 |
| 1070 | 1071 | 1072 |
| 1073 | 1074 | 1075 |
| 1076 | 1082 | 1083 |
| 1089 | 1091 | 1095 |
| 1098 | 1099 | 1103 |
| 1105 | 1108 | 1111 |
| 1112 | 1114 | 1116 |
| 1117 | 1118 | 1119 |
| 1121 | 1125 | 1126 |
| 1128 | 1129 | 1131 |
| 1133 | 1136 | 1143 |
| 1146 | 1147 | 1151 |
| 1152 | 1155 | 1156 |
| 1158 | 1159 | 1163 |
| 1166 | 1167 | 1168 |
| 1169 | 1172 | 1173 |
| 1183 | 1184 | 1185 |
| 1186 | 1188 | 1191 |
| 1195 | 1200 | 1201 |
| 1203 | 1205 | 1207 |
| 1209 | 1217 | 1218 |
| 1221 | 1224 | 1228 |
| 1229 | 1230 | 1233 |
| 1234 | 1235 | 1242 |
| 1245 | 1251 | 1252 |
| 1253 | 1255 | |
| 1256 | 1261 | 1263 |
| 1266 | 1267 | 1268 |
| 1269 | 1272 | 1274 |
| 1275 | 1276 | 1280 |
| 1281 | 1288 | 1289 |
| 1290 | 1291 | 1298 |
| 1304 | 1305 | 1307 |
| 1309 | 1312 | 1325 |
| 1326 | 1327 | 1328 |
| 1330 | 1333 | 1336 |
| 1337 | 1339 | 1342 |
| 1344 | 1345 | 1346 |
| 1349 | 1350 | 1353 |
| 1357 | 1358 | 1363 |
| 1364 | 1365 | 1370 |
| 1371 | 1372 | 1375 |
| 1378 | 1379 | 1380 |
| 1381 | 1386 | 1387 |
| 1389 | 1394 | 1395 |
| 1396 | 1401 | 1402 |
| 1404 | 1406 | 1407 |
| 1411 | 1413 | 1419 |
| 1425 | 1431 | 1432 |
| 1433 | 1434 | 1435 |
| 1438 | 1447 | 1449 |
| 1455 | 1456 | 1463 |
| 1470 | 1472 | 1473 |
| 1474 | 1476 | 1478 |
| 1486 | 1487 | 1489 |
| 1490 | 1491 | 1493 |
| 1497 | 1499 | 1504 |
| 1505 | 1508 | 1511 |
| 1522 | 1524 | 1531 |
| 1537 | 1540 | 1543 |
| 1545 | 1547 | 1552 |
| 1559 | 1560 | 1561 |
| 1563 | 1566 | 1567 |
| 1568 | 1569 | 1572 |
| 1574 | 1575 | 1576 |
| 1579 | 1581 | 1583 |
| 1586 | 1591 | 1595 |
| 1600 | 1601 | 1609 |
| 1623 | 1624 | 1625 |
| 1626 | 1636 | 1638 |
| 1640 | 1643 | 1645 |
| 1646 | 1647 | 1657 |
| 1658 | 1662 | 1664 |
| 1668 | 1669 | 1676 |
| 1678 | 1681 | 1684 |
| 1685 | 1689 | 1695 |
| 1697 | | |

## யாழ்ப்பாணம்

யா/யா

| | | |
|---|---|---|
| 26 | 184 | 199 |
| 210 | 217 | 243 |
| 258 | 306 | 317 |
| 322 | 326 | 373 |
| 399 | 421 | 440 |
| 473 | 482 | 582 |
| 639 | 699 | 812 |
| 814 | 816 | 821 |
| 823 | 915 | 955 |
| 962 | 1004 | 1042 |
| 1071 | 1085 | 1142 |
| 1150 | 1232 | 1244 |
| 1250 | 1295 | 1381 |
| 1406 | 1457 | 1464 |
| 1492 | 1501 | 1533 |
| 1537 | 1563 | 1622 |
| 1642 | 1643 | 1694 |
| 1707 | 1709 | 1711 |
| 1735 | 1744 | 1748 |
| 1770 | 1785 | 1790 |
| 1930 | 1954 | 1966 |
| 1989 | 2019 | 2034 |
| 2109 | 2116 | 2132 |
| 2137 | 2138 | 2141 |
| 2156 | 2162 | 2174 |
| 2181 | 2218 | 2231 |
| 2237 | 2261 | 2304 |
| 2306 | 2382 | 2402 |
| 2418 | 2430 | 2445 |
| 2495 | 2499 | 2510 |
| 2576 | 2581 | 2648 |
| 2651 | 2652 | 2660 |
| 2679 | 2681 | 2690 |
| 2708 | 2765 | 2776 |
| 2853 | 2854 | 2864 |
| 2908 | 2928 | 2968 |
| 2971 | 3009 | 3015 |
| 3056 | 3121 | |
| 3122 | 3160 | 3163 |
| 3221 | 3238 | 3244 |
| 3274 | 3275 | 3304 |
| 3335 | 3375 | 3401 |
| 3414 | 3418 | 3440 |
| 3444 | 3448 | 3462 |
| 3468 | 3531 | 3540 |
| 3562 | 3604 | 3612 |
| 3639 | 3680 | 3716 |
| 3782 | 3807 | 3833 |
| 3838 | 3849 | 3860 |
| 3890 | 3916 | 3929 |
| 3954 | 3974 | 4068 |
| 4131 | 4142 | 4177 |
| 4181 | 4227 | 4256 |
| 4275 | 4306 | 4315 |
| 4326 | 4337 | 4401 |
| 4417 | 4429 | 4449 |
| 4482 | 4541 | 4551 |
| 4593 | 4647 | 4657 |
| 4673 | 4711 | 4730 |
| 4803 | 4839 | 4866 |
| 4917 | 4919 | 4979 |
| 4983 | 5004 | 5017 |
| 5024 | 5036 | 5039 |

## நல்லூர்

யா/ந

| | | |
|---|---|---|
| 4 | 40 | 82 |
| 90 | 92 | 107 |
| 187 | 190 | 237 |
| 264 | 328 | 330 |
| 400 | 408 | 422 |
| 440 | 445 | 447 |
| 484 | 578 | 604 |
| 609 | 625 | 649 |
| 659 | 661 | 707 |
| 796 | 824 | 862 |
| 887 | 890 | 896 |
| 941 | 957 | 1058 |
| 1207 | 1260 | 1302 |
| 1307 | 1313 | 1321 |
| 1360 | 1382 | 1421 |
| 1462 | 1472 | 1488 |
| 1510 | 1555 | 1568 |
| 1592 | 1643 | 1647 |
| 1768 | 1777 | 1789 |
| 1807 | 1818 | 1846 |
| 1867 | 1938 | 1954 |
| 2012 | 2120 | 2124 |
| 2174 | 2215 | 2277 |
| 2315 | 2368 | 2369 |
| 2409 | 2494 | 2498 |
| 2563 | 2587 | 2597 |
| 2674 | 2698 | 2764 |
| 2869 | 2873 | 2937 |
| 2947 | 2980 | 3086 |
| 3111 | 3115 | 3133 |
| 3160 | 3203 | 3217 |
| 3220 | 3292 | 3299 |
| 3362 | 3400 | 3406 |
| 3438 | 3464 | 3481 |
| 3569 | 3660 | 3698 |
| 3787 | 3798 | 3800 |
| 3807 | 3815 | 3823 |
| 3828 | 3835 | 3837 |
| 3857 | 3858 | 3869 |
| 3886 | 3926 | 4004 |
| 4018 | 4077 | 4190 |
| 4197 | 4248 | 4280 |
| 4308 | 4381 | 4414 |
| 4475 | 4487 | 4489 |
| 4507 | 4556 | 4558 |
| 4581 | 4591 | 4625 |
| 4638 | 4652 | |
| 4849 | 4883 | 4891 |
| 4936 | 4956 | 5010 |
| 5026 | 5055 | 5057 |
| 5074 | 5077 | 5108 |
| 5122 | 5141 | 5158 |
| 5178 | 5190 | 5199 |
| 5232 | 5244 | 5250 |
| 5274 | 5282 | 5286 |
| 5302 | 5334 | 5343 |
| 5385 | 5396 | 5429 |
| 5436 | 5453 | 5455 |
| 5458 | 5468 | 5484 |
| 5493 | 5499 | 5565 |
| 5589 | 5600 | 5646 |
| 5649 | 5660 | 5670 |
| 5700 | 5728 | 5753 |
| 5838 | 5852 | 5883 |
| 5951 | 5960 | 5962 |
| 5967 | 6009 | |

## கோப்பாய்

யா/கோ

| | | |
|---|---|---|
| 12 | 21 | 45 |
| 103 | 149 | 261 |
| 322 | 415 | 423 |
| 427 | 493 | 517 |
| 651 | 711 | 838 |
| 842 | 845 | 906 |
| 925 | 955 | 1026 |
| 1053 | 1102 | 1123 |
| 1126 | 1154 | 1158 |
| 1185 | 1223 | 1237 |
| 1302 | 1333 | 1380 |
| 1423 | 1452 | 1473 |
| 1558 | 1563 | 1652 |
| 1656 | 1714 | 1734 |
| 1742 | 1785 | 1796 |
| 1813 | 1864 | 1909 |
| 1988 | 2001 | 2020 |
| 2081 | 2084 | 2101 |
| 2132 | 2138 | 2141 |
| 2150 | 2269 | 2302 |
| 2326 | 2327 | 2346 |
| 2349 | 2412 | 2437 |
| 2438 | 2505 | 2579 |
| 2605 | 2642 | 2670 |
| 2730 | 2779 | 2841 |
| 2883 | 2938 | 2973 |
| 2984 | 3005 | 3049 |
| 3080 | 3081 | 3119 |
| 3153 | 3194 | 3247 |
| 3248 | 3355 | 3370 |
| 3402 | 3469 | 3539 |
| 3546 | 3625 | 3644 |
| 3684 | 3689 | 3806 |
| 3865 | 3982 | 4003 |
| 4121 | 4164 | 4210 |
| 4285 | 4290 | 4296 |
| 4300 | 4322 | 4381 |
| 4382 | 4428 | 4433 |
| 4474 | 4545 | 4670 |
| 4725 | 4826 | 4832 |
| 4855 | 4859 | 4958 |
| 4962 | 4970 | 4987 |
| 5013 | 5023 | 5025 |
| 5105 | 5109 | 5264 |
| 5265 | 5314 | 5327 |
| 5353 | 5447 | 5501 |
| 5536 | 5623 | 5651 |
| 5764 | 4800 | 5823 |
| 5831 | 5871 | 5918 |
| 5997 | 6043 | 6123 |
| 6138 | 6141 | 6144 |
| 6160 | 6161 | 6237 |
| 6239 | 6245 | |
| 6284 | 6294 | 6298 |
| 6330 | 6331 | 5359 |
| 6363 | 6412 | 6451 |

## உடுவில்

யா/உ

| | | |
|---|---|---|
| 54 | 116 | 155 |
| 275 | 276 | 296 |
| 346 | 396 | 414 |
| 430 | 438 | 455 |
| 459 | 680 | 728 |
| 755 | 762 | 775 |
| 869 | 923 | 970 |
| 994 | 1009 | 1031 |
| 1122 | 1209 | 1308 |
| 1325 | 1345 | 1362 |
| 1501 | 1562 | 1585 |
| 1653 | 1670 | 1671 |
| 1674 | 1688 | 1690 |
| 1695 | 1714 | 1734 |
| 1773 | 1824 | 1825 |
| 1879 | 1884 | 1967 |
| 2037 | 2056 | 2067 |
| 2086 | 2113 | 2129 |
| 2139 | 2158 | 2196 |
| 2202 | 2265 | 2277 |
| 2296 | 2299 | 2319 |
| 2347 | 2491 | 2510 |
| 2525 | 2528 | 2611 |
| 2633 | 2647 | 2652 |
| 2676 | 2689 | 2693 |
| 2726 | 2795 | 2806 |
| 2824 | 2877 | 2882 |
| 2909 | 2961 | 2983 |
| 3003 | 3039 | 3052 |
| 3053 | 3057 | 3145 |

## மானிப்பாய்

யா/மா

| | | |
|---|---|---|
| 46 | 93 | 106 |
| 133 | 225 | 243 |
| 255 | 264 | 307 |
| 369 | 394 | 413 |
| 421 | 447 | 449 |
| 458 | 489 | 659 |

( 4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள, இயங்கிக் கொண்டிருக்கு 30 H.P யன்மார் என்ஜின் விற்பனைக்குண்டு. குணா மில், அல்லையம்பதி, துன்னாலை தெற்கு கரவெட்டி. (39513)

### தவறிவிட்டது

த2-8971, த2-7969 ஆகிய இரண்டு மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகங்கள் மிருசுவில் கண்டி வீதியில் 13.12.95 அன்று தவறிவிட்டன. எடுத்தவர்கள் மிருசுவில் கண்டிவீதியில் உள்ள வதனி களஞ்சியத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (39631)

### தேவை

தூள் அரைக்கும்கிறைண்டர் பிளேற்ஸ் 12 அங். ;— என்ஜின் லிஸ்ரர் (இந்தியன்) இரண்டு சிலிண்டர் கிறாங்க் தேவை. தொடர்பு கொள்ளவும் மு. ஜெயசிங்கம், ''அருணோதயம்'' மட்டுவில் தெற்கு. (39514)

### தவறிவிட்டது

R. A. Chrysostem என்னும் பெயருக்கு எழுதப்பட்ட 2874/-காசோலை தெய்வேந்திரா தியேட்டருக்கும் சா/இலங்கை வங்கிக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர் கு.ரவீந்திரகுமார் புகையிரத ஒழுங்கை சாவகச்சேரி என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (39633)

## கண்ணீர் அஞ்சலி

### அம்பலவாணர் திருநாமம்

[உரிமையாளர், சிவா வெதுப்பகம்; வழக்கம்பரை, சுழிபுரம்.]

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் சங்கானை/சண்டிலிப்பாய் கிளையைச் சேர்ந்த அங்கத்தவரான

**அ. திருநாமம் அவர்களின்**

மரணச்செய்தி கேட்டு ஆற்றொணா துயரடைகின்றோம். இவரின் மறைவு எமது சங்கத்திற்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். மா. வெ. உ. சங்கம்.**

தற்காலிக முகவரி:–
தென்மராட்சிக் கிளை,
74, கண்டி றோட,
துணாவில், சாவகச்சேரி. [39512]

## 6 - ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
20 — 07 — 1984



ஆண்டவன் அடியில்:
20 — 11 — 1989

செல்வி

### சித்திரகலா அமரசேனாதிபதி

திதி: 15 - 12 - 1995

கண்ணீர்ப் பூக்கள்

எம் இனிய சித்திரமே
சித்திரகலா – நீ
கொஞ்சிப் பேசும் மழலை மொழி கேட்க - உன்
உயிர் ஓவியத்தின் முன் நின்று
வரம் வேண்டி... இன்று ஆண்டுகள்.. ஆறு ஆகுதம்மா...
84 இல் வந்து தித்த எம்
இனிய மகளே உடன் பிறப்பே
சிரித்தாய், நடந்தாய்...
பாடினாய், ஆடினாய்...
89 இல் எங்கேயம்மா போனாய்
உனைக் காணாமல் ஆண்டுகள்
ஆறாக ஓடுதம்மா நீ
அதில் நீந்தி வந்து
காட்சி எமக்கு தாருமம்மா...!!

உமது பிரிவால் வாடும்

ஐயா, அம்மா, ஆசை அண்ணா,
அப்பாச்சி, அம்மாச்சி, பெரியப்பா,
மாமி குடும்பம், உறவினர்கள்.

''சுதா பவனம்''
மயிலியதனை,
தொண்டமனாறு. [39503]

# மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| 727 | 839 | 948 |
| 950 | 987 | 1016 |
| 1087 | 1133 | 1170 |
| 1214 | 1222 | 1245 |
| 1252 | 1306 | 1310 |
| 1381 | 1392 | 1435 |
| 1457 | 1492 | 1518 |
| 1535 | 1553 | 1559 |
| 1590 | 1592 | 1593 |
| 1668 | 1670 | 1688 |
| 1703 | 1709 | 1892 |
| 1921 | 1923 | 1934 |
| 1980 | 2028 | 2043 |
| 2044 | 2051 | 2115 |
| 2173 | 2202 | 2219 |
| 2302 | 2352 | 2369 |
| 2386 | 2414 | 2475 |
| 2499 | 2531 | 2554 |
| 2573 | 2621 | 2642 |
| 2646 | 2706 | 2718 |
| 2720 | 2776 | 2783 |
| 2830 | 2853 | 2856 |
| 2863 | 2869 | 2904 |
| 2921 | 2970 | 2988 |
| 2992 | 3005 | 3010 |
| 3058 | 3085 | 3096 |
| 3107 | 3127 | 3143 |
| 3149 | 3158 | 3165 |
| 3192 | 3255 | 3291 |
| 3300 | 3302 | 3304 |
| 3312 | 3320 | 3362 |
| 3409 | 3458 | 3459 |
| 3474 | 3483 | 3486 |
| 3509 | 3513 | 3547 |
| 3549 | 3656 | 3678 |
| 3703 | 3723 | 3740 |
| 3809 | 3818 | 3862 |
| 3864 | 3866 | |

## சங்கானை

யா/ச

| | | |
|---|---|---|
| 11 | 29 | 44 |
| 57 | 75 | 121 |
| 163 | 176 | 202 |
| 322 | 361 | 370 |
| 373 | 515 | 561 |
| 578 | 602 | 630 |
| 650 | 705 | 754 |
| 759 | 771 | 777 |
| 785 | 796 | 801 |
| 821 | 825 | 851 |
| 888 | 921 | 962 |
| 990 | 997 | 1013 |
| 1034 | 1051 | 1054 |
| 1063 | 1072 | 1127 |
| 1141 | 1162 | 1178 |
| 1198 | 1200 | 1210 |
| 1239 | 1286 | 1327 |
| 1328 | 1357 | 1452 |
| 1457 | 1471 | 1494 |
| 1495 | 1508 | 1534 |
| 1575 | 1589 | 1639 |
| 1648 | 1739 | 1781 |
| 1849 | 1855 | 1934 |
| 1960 | 1961 | 1987 |
| 2007 | 2026 | 2052 |
| 2055 | 2079 | 2105 |
| 2113 | 2116 | 2149 |
| 2221 | 2223 | 2225 |
| 2244 | 2248 | 2261 |
| 2264 | 2282 | 2290 |
| 2292 | 2318 | 2334 |
| 2464 | 2492 | 2497 |
| 2534 | 2561 | 2568 |
| 2571 | 2588 | 2599 |
| 2600 | 2641 | 2683 |
| 2735 | 2753 | 2771 |
| 2785 | 2793 | 2796 |
| 2809 | 2814 | 2876 |
| 2908 | 2917 | 2925 |
| 2960 | 3009 | 3072 |
| 3090 | 3120 | 3132 |
| 3141 | 3150 | 3205 |
| 3211 | 3327 | 3349 |
| 3412 | 3423 | 3451 |
| 3483 | 3484 | 3489 |
| 3491 | 3583 | 3591 |
| 3616 | 3625 | 3639 |
| 3665 | 3714 | 3732 |
| 3740 | 3742 | 3743 |
| 3777 | 3934 | 3945 |
| 3948 | 3961 | 3971 |
| 3974 | 3988 | 4106 |
| 4170 | 4220 | 4369 |
| 4377 | 4389 | 4429 |
| 4442 | 4472 | 4498 |
| 4500 | 4538 | 4567 |
| 4602 | 4605 | 4667 |

## தெல்லிப்பளை

யா/தெ

| | | |
|---|---|---|
| 181 | 218 | 236 |
| 283 | 323 | 331 |
| 335 | 388 | 411 |
| 427 | 437 | 439 |
| 450 | 530 | 550 |
| 556 | 608 | 621 |

| | | |
|---|---|---|
| 623 | 627 | 862 |
| 868 | 888 | 915 |
| 950 | 957 | 958 |
| 968 | 971 | 973 |
| 981 | 1007 | 1009 |
| 1030 | 1036 | 1053 |
| 1056 | 1060 | 1101 |
| 1178 | 1200 | 1202 |
| 1226 | 1253 | 1270 |
| 1343 | 1428 | 1453 |
| 1458 | 1468 | 1469 |
| 1510 | 1549 | 1550 |
| 1590 | 1622 | 1642 |
| 1643 | 1653 | 1664 |
| 1668 | 1692 | 1738 |
| 1763 | 1809 | 1826 |
| 1837 | 1852 | 1863 |
| 1928 | 1967 | 1982 |
| 1988 | 2013 | 2021 |
| 2023 | 2024 | 2038 |
| 2040 | 2048 | 2084 |
| 2100 | 2123 | 2222 |
| 2244 | 2269 | 2293 |
| 2310 | 2322 | 2336 |
| 2396 | 2403 | 2442 |
| 2492 | 2540 | 2586 |
| 2597 | 2623 | 2674 |
| 2700 | 2728 | 2732 |
| 2737 | 2738 | 2810 |
| 2826 | 2829 | 2847 |
| 2868 | 2886 | 2905 |
| 2942 | 3028 | 3059 |
| 3159 | 3166 | 3224 |
| 3226 | 3231 | 3282 |
| 3344 | 3347 | 3358 |
| 3410 | 3465 | 3481 |
| 3486 | 3571 | 3592 |
| 3604 | 3618 | 3761 |
| 3771 | 3817 | 3852 |
| 3892 | 3898 | 3902 |
| 3904 | 3924 | 3928 |
| 3963 | 3970 | 4010 |
| 4062 | 4076 | 4086 |
| 4091 | 4108 | 4123 |
| 4153 | 4158 | 4160 |
| 4163 | 4192 | 4195 |
| 4257 | 4261 | 4266 |
| 4306 | 4309 | 4326 |
| 4400 | 4409 | 4423 |
| 4424 | 4425 | |

சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரிவுகளில் மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு பெறுவோரின் கடன் பத்திர இலக்கங்கள் பற்றிய விவரம் நாளைய உதயனில் பிரசுரமாகும்.

# கட்டாக்காலி நாய்கள் மந்திகையில் அழிப்பு

## நோயாளர் தொல்லை தீர்ந்தது

வடமராட்சி, டிச. 15

மந்திகையில் உள்ள பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நோயாளருக்குத் தொல்லை கொடுத்த நாய்களில் முப்பத்தைந்து புதனன்று அழிக்கப்பட்டன.

மந்திகை ஆதார வைத்திய சாலையிலேயே இப்போது யாழ். போதனா வைத்திய சாலையும் இயங்குகிறது. அதனால் படுக்கை வசதி இல்லாததால் நோயாளர்களில் பெரும்பாலானோர் ஆஸ்பத்திரி விறாந்தைகளில் பாய்களிலேயே படுத்துறங்குகின்றனர்.

வைத்தியசாலைக்கு வரும் கட்டாக்காலி நாய்கள் இரவு வேளைகளில் நோயாளர்களுடன் படுத்துறங்கும் காட்சி நாளாந்தத் தொல்லையாக இருந்தது.

இது குறித்து ''நோயாளருடன் உறங்கும் கட்டாக்காலி நாய்கள்'' என்ற தலைப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயனில் செய்தி வெளியாகி இருந்தது.

அதனை அடுத்து பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி வளவில் நடமாடிய கட்டாக்காலி நாய்கள் புதனன்று அழிக்கப்பட்டன; அவை நஞ்சூட்டிக் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டன. (அ–173)

## உடன் சந்திக்கவும்

**A. ELBERT THASAN** [ஜயசூரியா]

தொழில் நியாயமன்று 2ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை என்பவரை

V. காந்தராசா
உதவிச் செயலாளர்,
தொழ்'ல் நியாய மன்று,
யாழ்ப்பாணம்.

என்பவர் தேடுகிறார். உடன் தற்போதைய கரவெட்டி அலுவலகத்தில் சந்திக்கவும்.

[39632]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்; 03. 05. 1911 — மறைவு; 15. 11. 1995

அமரர்

### இ. பொ. குமாரசுவாமி

(முன்னாள் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபர், நல்லூர் ப. நோ. கூ. சங்க தலைவர், கோண்டாவில் ஐக்கிய பண்டகசாலை தலைவர்)

இன்று 15. 12. 1995 அன்னாரின் அந்தியேட்டியும் ஆத்ம சாந்திப் பூசையும் தனங்கிளப்பில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

அன்னாரின் ஈமச் சடங்கின்போது உதவி புரிந்த நண்பர்கள், உறவினர் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை
(39511)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக இறுதி ஆண்டு பரீட்சைகள் ஜனவரியில் நடக்கும்

## நேற்றைய கூட்டத்தில் முடிவு

சாவகச்சேரி, டிச. 15

யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களிலும் இறுதி ஆண்டுப் பரீட்சைகளை ஜனவரி மாதத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பேரவை, மூதவைக் கூட்டங்கள் நேற்று நடைபெற்ற சமயம் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கும் தற்காலிக அலுவலகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

விரிவுரைகளை தற்காலிகமாக நிறுத்துதல், நிர்வாகத்தை நடத்துதல் போன்ற விடயங்கள் இக்கூட்டங்களில் ஆராயப்பட்டன.

இறுதி ஆண்டு மாணவர்களின் நலனைக் கருதி அனைத்துப் பீடங்களின் இறுதிப் பரீட்சைகளை ஜனவரி முதல் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. (இ-3-7)

# தொண்டர் நிறுவனம் மீது கட்டுப்பாடு மனித உரிமை இயக்கம் கவலை

கொழும்பு, டிச 15

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மீது அரசாங்கம் தனது கட்டுப்பாடுகளை இறுக்கி வருவதற்கு இலங்கை மனித உரிமைகள் இயக்கம் கவலை தெரிவித்துள்ளது.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக தொண்டர் சமூக சேவைகள் சட்டத்தில் அரசங்கம் திருத்தம் கொண்வர இருப்பதும் —

இந்த சட்டத் திருத்தம் மூலம் சில குறிப்பிட்ட அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்ககளைக் கட்டுபடுத்த அமைச்சர் இடைக்கால சபை ஒன்றை நிறுவ அதிகாரம் அளிக்கப்பட்டு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை மனித உரிமைகள் இயக்கச் செயலாளர் திரு. சூரியா விக்கிரமசிங்கா இது தொடர்பாக கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (இ)

## வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

சுகயீனம் காரணமாக சாவகச்சேரி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றபோது 13 ஆம் திகதி சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை பாரதியின் (சின்னத்தம்பி சுகிர்தா — நீர்வேலி வடக்கு) வித்துடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு மக்களின் இறுதி வீரவணக்கத்துக்காக சாவகச்சேரி கச்சாய் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் வைக்கப்பட்டிருக்கும்.

பின்னர் அணிவகுப்பு மரியாதைகளுடன் வித்துடல் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித விதை குழியில் விதைக்கப்படும்.

# தீவுப் பகுதி அரச ஊழியர்களுக்கு 3 மாதங்களாக சம்பளம் இல்லை

## உணவுக்குப் பெரும் தட்டுப்பாடு

வவுனியா, டிச. 15

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப் பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களாக பெரும் உணவுத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் — அரசாங்க ஊழியர்களுக்கு மூன்று மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. குடும்பம் ஒன்றுக்கு மாதம் ஒரு கிலோ மா மட்டுமே வழங்கப்படுகிறது.

திருகோணமலைக்கும் தீவுப் பகுதிகளுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை கடந்த மூன்று மாதங்களாக நடைபெறாததே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

வடக்கு—கிழக்கு மாகாண சபை அலுவலகங்களில் இருந்து தீவுப் பகுதிகளுக்குரிய சம்பளப் பட்டியலையும் சம்பளத்தையும் அனுப்பி வைக்க முடியாததன் காரணமாகவே அரசு ஊழியருக்கு சம்பளம் வழங்க முடியாதிருப்பதாக அதிகாரிகள் தெரிவிப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தீவுப் பகுதி மக்கள் தமது வாழ்க்கை நிலைமைகள் குறித்து தீவுப் பகுதிக்கு வெளியே உள்ள தமது உறவினர்களுக்கு கடிதம் எழுதி வருகின்றனர்.

தீவுப் பகுதி மக்களுக்கும் வெளி உலகுக்கும் இடையே தற்போது தபால் மூலமான தொடர்பு மட்டுமே இருந்து வருவதாகவும்—

காரைநகரில் அமைந்துள்ள வட பகுதியின் பிரதான கடற்படைத் தளத்துக்கும் கொழும்புக்கும் இடையில் சீரான தபால் சேவைகள் நடைபெறுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# நல்லெண்ணெய் போத்தல் ரூ.400!

வவுனியா, டிச. 14

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப்பகுதிகளில் நல்லெண்ணெய் ஒரு போத்தல் 400 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. புளி கிலோ 120 ரூபாவுக்கு விற்கப்பட்டது. ஆனால் தற்போது புளி மருந்துக்கும் அங்கு கிடையாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை தீவுப்பகுதிகளில் பருவ மழை மிகவும் குறைவாகவே பெய்துள்ளது நெற் செய்கைக்கு இங்குள்ள விவசாயிகள் ஆயத்தங்களை மேற்கொண்ட போதிலும் விவசாயத் தேவைக்குரிய விதை பொருள்கள், பசளை, மற்றும் இரசாயனப் பொருள்கள் அங்கு போய்ச் சேரவில்லை தீவுப்பகுதிகளில் மரக்கறி வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. சாதாரண கீரை கூட அங்கு கிடைப்பது கஸ்டமாக இருக்கிறது.

தீவுப்பகுதிகளில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக் மருந்தகங்களும் பனடோல் முதல் அத்தியாவசிய மருந்து எதுவும் இன்றி வெறிச் சோடிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (இ)

## பனையிலிருந்து புதிதாக சந்தைக்கு வரும் 'மதுரசம்'

சாவகச்சேரி, டிச. 15

பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் ஆராய்ச்சிப் பிரிவினர் 'மதுரசம்' எனும் புதியதொரு பானத்தைக் கண்டு பிடித்துள்ளனர்.

சாதாரண பியருக்கு ஒப்பான இந்தப் பானம் விரைவில் சந்தைக்கு வரவுள்ளது.

இந்தப் பானம் முற்று முழுதாக இயற்கையான மூலப் பொருள்களிலிருந்தே பிரித்தெடுக்கப்படுகிறது.

பனையின் இளம் பூந்துணரிலிருந்து பெறப்படும் இந்தப் பானம் சிறந்த சுவை மிக்கதாகவும், நல்ல மணம் உள்ளதாகவும் இருக்கிறது.

இந்தப் பானத்தை போத்தல்களில் அடைத்து 'லேபல்' இடும் வேலைகள் முடிவுற்றதும் விற்பனைக்காக சந்தைக்கு வர உள்ளதாக வட பிராந்திய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி. சபாரட்ணம் தெரிவித்தார்.

## தொடர்பு கொள்ளுமாறு கோரிக்கை

நாவற்குழியைச் சேர்ந்த வெங்கடேஸ்வரன், மற்றும் அராலி தெற்கு, வட்டுக்கோட்டை கிராம அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த தலைவர் அல்லது செயலாளர் ஆகியோரை 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00மணிக்கு தமிழீழ நிர்வாக சேவையின் பொறியியற் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## வடபகுதிக்கடலில் வீழ்ந்த விமானச் சிதைவுகளை மீட்க சுழியோடிகள் திட்டம்

கொழும்பு, டிச. 15

வடபகுதிக் கடலில் சமீபத்தில் வீழ்ந்து நொறுங்கிய விமானப்படையின் இரு விமானங்களின் சிதைவுகளை மீட்டெடுப்பதற்கு ''மாஸ்ரர் டைவோஸ்'' நிறுவன சுழியோடிகள் திட்டமிட்டுள்ளனர்.

வீழ்ந்து நொறுங்கிய ''வை 8'' மற்றும் ''அன்ரனோவ்'' விமானங்களின் சிதைவுகளை மீட்டெடுக்கும் பணியில் இந்த நிறுவனத்தின் சுழியோடிகள் குழு ஒன்று விரைவில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீட்புப்பணிக்காக அரசிடம் இருந்து பணம் எதையும் பெறப்போவதில்லை என்று அந்நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடலுக்குள் மூழ்கி உள்ள ''வை 8'' ரக விமானத்தை தாம் படம் பிடித்துள்ளதாகவும்—

மீட்புப்பணி விரைவில் ஆரம்பமாகும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-3)

## ஐ. தே. கவின் புதிய தவிசாளர்

கொழும்பு, டிச. 15

ஐ.தே.கட்சியின் தவிசாளராக பிரபல வர்த்தகப் பிரமுகரான கரு ஜெயசூரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீகோத்தாவில் ஐ. தே. கட்சியின் செயற்பாட்டுக் குழுக் கூட்டத்தில் நேற்று இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஐ.தே.கட்சியின் தவிசாளராக இருந்த ஏ. ஸி. எஸ். ஹமீத் தமது பதவியை ராஜினாமாச் செய்ததை அடுத்து இந்த நியமனம் இடம்பெற்றது. (இ-3)

## 7 சைக்கிள்கள் களவு

சாவகச்சேரியில் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்து வருகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் ஏழு சைக்கிள்கள் சாவகச்சேரி நகரில் திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரி காவல் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [இ-117]

## உதயன்

### அச்சம் ஏன்?

ஈழத்தில் போரினால் பாதிக்கப்படும் தமிழர்களுக்கு உதவும் வகையில், தமிழகத் தமிழ் மக்கள் சேகரித்த உயிர் காக்கும் மருந்து வகைகள், இரத்தம் மற்றும் நிவாரணப் பொள்களை ஏற்றுக் கொள்வதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் மறுத்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தங்களினாலும், போர் போன்றவற்றாலும் பாதிக்கப்படும் எவருக்கும், மனித நேய அடிப்படையில் உள்நாட்டவர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் நிவாரண உதவிகள் வழங்குவது வழக்கம்.

பாதிக்கப்பட்ட மக்களின் அரசு அவற்றைப் பொறுப்பேற்று, அன்பளிப்புச் செய்தவர் குறிப்பிடும் பாதிக்கப்பட்டோருக்கு விநியோகிப்பது உலக நடைமுறை.

ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கம் இது விடயத்தில் புறம்பான—விசித்திரமான—நடைமுறையை கையாள்கிறது. தான் வடக்கு-கிழக்கில் நடத்தும் போரினால் பாதிக்கப்படும் தமிழர்களுக்கு மனித நேய உதவிகளை — நிவாரண உதவிகளை—வழங்கும் வெளி நாடுகளும் சரி, அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் சரி, அரசாங்கத்திடமே கையளிக்கவேண்டும், அரசாங்கமே அவற்றை விநியோகிக்கும் என்பது ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாடாக உள்ளது.

சர்வதேச நடைமுறைகளுக்கு மாறான ஸ்ரீலங்கா அரசின் இந்தப் புதிய கெடுபிடியினால் அரச சார்பற்ற சர்வதேச தொண்டர் நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையில் பெரும் முறுகல் நிலை தோன்றியது தெரிந்ததே.

''றிவரச'' இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த மக்களை யாழ்ப்பாணத்துக்குத் திரும்புமாறும், அங்கு புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போவதாகவும், நிமிடத்துக்கு நிமிடம் ஆசைவார்த்தைகளை வானொலி ஊடாக அள்ளி வீசும் அரசாங்கம் —

தமிழக மக்கள் வழங்கும் நிவாரணப் பொருள்களைப் பெற்று, பாதிக்கப்பட்ட—இடம்பெயர்ந்த — தமிழ் மக்களுக்கு விநியோகிர்க மறுத்து விட்டது.

போரினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் நலனில் சந்திரிகா அரசு எந்தளவில் உண்மையான அக்கறை கொண்டுள்ளது என்பதனை இதிலிருந்து எவரும் மதிப்பிட்டுக் கொள்ளலாம்.

அது மட்டுமல்ல.

தமிழக மக்கள், ஈழத்தமிழர்களுக்கு மனித நேய ரீதியில் கூட உதவுவதை கொழும்பு அரசு விரும்பவில்லை. அந்த மனித நேய உதவி அரசியல் உறவாக மாறினால், வளர்ந்தால் தாம் நிலை நிறுத்த விரும்பும் பௌத்த சிங்களப் பேரினவாதத்துக்கு ஆபத்தாகிவிடும் என்று சந்திரிகா அஞ்சுகிறார்.

தமிழகச் சகோதரர்களின் நிவாரணப் பொருள்கள் தமிழர்களுக்குக் கிடைக்காமல் தடுத்துவிடுவதால், இருசாராருக்கும் இடையே உள்ள இரத்த உறவைச் சந்திரிகாவால் அழித்துவிட முடியாது. அதுபோலவே ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு தமிழக மக்கள் வழங்கும் மனமார்ந்த ஆதரவை குலைத்து விடவும் இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் சந்திக்கவும்

கொழும்பில் வசிக்கும்
குருசாமிதேவன் ஆறுமுகம்
யாழ்ப்பாணம் முருகமூர்த்தி வீதியில் வசித்த சகோதரர்
குருசாமிதேவன் பழனிவேலுக்கு
கடிதம் தந்துள்ளார். அதனை 'குருபவனம்' கண்டி வீதி, (ஆஸ்பத்திரிக்கு அருகில்) சாவகச்சேரி என்னும் முகவரியில் உடன் பெற்றுக்கொள்ளவும்.

பு. குருபரன்

(39636)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகரட்ணம் வேதமங்கை

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மறுவன்புலோவில் வசித்தவருமான கனகரட்ணம் வேதமங்கை காலமானார்.

இவர் கனகரட்ணத்தின் அன்பு மனைவியும், ஆறுமுகம் (ஆறுவிரல்) - வள்ளியம்மையின் அன்பு மகளும், சபாரத்தினம், கனகசபை, துரைராசா, அருளானந்தம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-12-95) காலை 10-00 மணியளவில் மறுவன்புலோவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
ச. சுந்தரலிங்கம்

தற்போதய விலாசம்:
கோணேஸ்வரன் வீதி,
வாசிகசாலையடி,
மறுவன்புலோ. (தோப்பு)

(சி/3145)

## நாகரத்தினம் சிவராஜராம்

[பிரதி ஆணையாளர் உள்நாட்டு இறைவரி திணைக்களம்,பதுளை பிராந்தியம்[

கந்தர்மடம் அன்ன சத்திர ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற தபாலதிபர் நாகரத்தினம், திருமதி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகன் சிவராஜராம் பதுளையில் 11-12-95 இல் காலமானார்.

இவர் சிவசுப்பிரமணியம் (கொழும்பு), சிவராமன் [கனடா), சிவபாலன் (லண்டன்), சிவசக்தி (முன்னாள் யாழ். கச்சேரி கலாசார உத்தியோகத்தர்), சிவரூபி [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரரும் விக்கினேஸ்வரி, சகுந்தலா, றஞ்சி, தியாகராசா (Paranthan Cmehicalsl D. O), ராஜலிங்கம் [கனடா] ஆகியோரின் மைத்துனருமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-12-95 கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
பொ. தியாகராசா
(மைத்துனர்)

P. M. கந்தையா வீடு,
ஐயா கடையடி,
சாவகச்சேரி - வடக்கு.

(39515)

## ஐயம்பிள்ளை கந்தையா

(இருபாலை)

இருபாலை, அரசடி வீதியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை கந்தையா மீசாலையில் காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், லக்சல, யாழ்ப்பாணம்), சிவஞானம் (தொழில்நுட்ப உத்யோகத்தர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), கனகசபை (லிகிதர், பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபனம், பரந்தன்), கனகரத்தினம் (போதனாசிரியர், இலங்கை கைப்பணி பொருள்கள் சபை, கச்சேரி, யாழ்ப்பாணம்), கமலராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், குலமணிதேவி, சரோஜினிதேவி, சுந்தரலிங்கம், மலர்விழி (ஆசிரியை, யாழ்/மாதகல் நுணசை வித்தியாலயம்), புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதாஜினி, சுஜிதா, சுபாஸ், சுகந்தன், சிவகஜனி, சிவகஜன், கஸ்தூரி, ஞானவேள், லக்சனா ஆகியோரின் அன்புச் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (15 - 12 - 95) வெள்ளிக்கிழமை 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சுப்பிரமணியம்
(மகன்)

சித்திர வேலாயுதசுவாமி கோவிலடி,
மடத்தடி கிழக்கு ஒழுங்கை,
மீசாலை தெற்கு.
மீசாலை.

(39523)

மேலும் மரண அறிவித்தல் இரண்டாம் பக்கத்தில்

# வலிகாமத்தை சிறைகூடமாக்கி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரிகா.

சந்திரிகாவின் தந்திரம் குறித்து எமது மக்கள் மிகவும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் மக்களை மீளக் குடியமர்த்தல் என்ற போர்வையில் சந்திரிகா அரசு ஒரு சூழ்ச்சி வலையை விரிக்கிறது. அன்புக் கரம் நீட்டி, ஆசை வார்த்தைகள் கூறி, மக்களை ஒரு மரணப் பொறிக்குள் தள்ளிவிட முனைகிறது. இந்தத் தந்திரோபாயம் சரிவராது போனால் இராணுவ நடவடிக்கை என்ற ஆயுத வன்முறை மூலமாக மக்களைச் சுற்றி வளைத்து சிறைப்பிடிக்கவும் அரசு எத்தனிக்கலாம்.

எப்படியாவது தமிழ் மக்களை யாழ்ப்பாணத்திற்குள் வலிந்திழுக்க வேண்டும் என்பது சந்திரிகா அரசுக்கு இன்று ஏற்பட்டுள்ள தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாகும். மக்கள் இல்லாத மண்ணில் அரச நிர்வாகத்தை நிறுவுவது சாத்தியமில்லை. அத்துடன் யாழ்ப்பாணப் படையெடுப்பே ஓர் அர்த்தமற்ற கேலிக் கூத்தாகி விடும். சந்திரிகாவின் இந்தச் சங்கடமான நிலையை முழு உலகமுமே இன்று அவதானித்து வருகிறது. யாழ்ப்பாணம் ஒரு வெற்றுப் பூமியாக வெறிச்சோடிக் கிடந்தால், சந்திரிகாவின் இராணுவத்தின் கீழ் தமிழ் மக்கள் தலை குனிந்து வாழ விரும்பவில்லை என்ற உண்மையையே அது உலகத்தாருக்கு உணர்த்திக் காட்டிவிடும். எனவே எந்த வகையான தந்திரோபாயத்தைக் கையாண்டாவது தமிழ் மக்களை யாழ்ப்பாணத்திற்கு வலிந்திழுக்க வேண்டும் என்பதில் சந்திரிகா அரசு உறுதிபூண்டு நிற்கிறது.

## புனரமைப்பு என்ற போர்வையில் பெரும் நிதியை ஏப்பம் விட திட்டம்

யாழ்ப்பாணத்தில் மக்களை குடியமர்த்துவதில் இன்னொரு கபட நோக்கமும் அரசுக்கு உண்டு. அதாவது, யாழ்ப்பாணப் புனர் நிர்மாணம் என்ற போர்வையில் பல ஆயிரம் கோடி ரூபா நிதியை மேற்குலகத்திடமிருந்து உதவியாகப் பெற்று, அதில் பெரும் பகுதியைப் போர்ச் செலவுக்கு ஏப்பம்விட அரசு திட்டமிட்டுள்ளது. புனர்நிர்மாணத்திற்காக இவ் வெளிநாட்டு உதவியைப் பெற்றுக் கொள்வதாக இருந்தால் யாழ்ப்பாணத்தில் மக்களைக் குடியமர்த்துவது அவசியமானது. எனவேதான், நிவாரணம், நிர்மாணம் என்ற ஆசை வார்த்தைகள் கூறி, தமிழ் மக்களை யாழ்ப்பாணம் வருமாறு அரசு அழைக்கிறது.

இடம்பெயர்வால் துன்புற்று வாழும் எமது மக்களின் மனவுறுதியைத் தளர்த்தி, அவர்களை யாழ்ப்பாணம் திரும்பி வரச்செய்யும் நோக்கில் சிங்கள அரசாங்கம் திட்டமிட்ட தீவிர பொய்ப்பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றது. இந்தப் பொய்ப்பிரசாரத்தில் மயங்கிக் குழப்பமடைவோர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல விருப்பம் கொள்ளலாம். இவ்விடயத்தில் நாம் எமது மக்களுக்கு எமது இயக்கத்தின் நிலைப்பாட்டை தெட்டத் தெளிவாக எடுத்துரைக்க விரும்புகிறோம்.

## இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் செல்வதை தவிர்ப்பதே மேலானது

சிங்கள இனவாத ஆயுதப் படைகள் யாழ்ப்பாண நகரிலும், வலிகாமத்தின் ஏனைய பகுதிகளிலும் நிலைகொண்டு நிற்கும் வரை எமது மக்கள் அப்பகுதிகளுக்கு திரும்பிச் செல்வது அவர்களது சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஆபத்தைப் பயக்கக்கூடியது என்றே நாம் கருதுகிறோம். அது சிங்களப் பேரினவாத அரக்கரின் மரணப் பொறிக்குள் கால்வைப்பதாகவே முடியும். எனவே எமது மக்களின் பாதுகாப்புக் கருதி, சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும் பகுதிகளுக்குள் எமது மக்கள் திரும்பிச் செல்வதைத் தவிர்த்துக் கொள்வதே மேலானது.

## மிகத் தீவிரமான போர்க்களமாக யாழ்ப்பாணம் விரைவில் மாறும்

இனி மேல்யாழ்ப்பாணம் ஓர் அமைதிப் பிரதேசமாக இருக்கப்போவதில்லை. யாழ் மண்மீதாக சிங்களத்தின் தேசியக்கொடி பறக்கும்வரை யாழ்ப்பாணத்தில் அமைதி நிலவப்போவதில்லை: ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து ஆக்கிரமிப்பாளரை விரட்டும் வரை யாழ்ப்பாணத்தில் போர் ஓயப்போவதில்லை; காலக்கெதியில் யாழ்ப்பாணம் மிகத் தீவிரமான போர்க்களமாக மாறுமென்பது திண்ணம். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பாளர் மீது விடுதலைப் புலிகள் இயக்கம் உக்கிரமான தாக்குதலைத் தொடரும் அவ்வேளை பெருமளவில் இரத்தத்தைச் சிந்தப்போகும் சிங்கள இனவாத இராணுவம் மீள் குடியமரும் தமிழர்கள் மீதே பழிவாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும், பேரிழப்யுக்களைச் சந்திக்கும் போதெல்லாம் பொதுமக்களைப் பழிவாங்குவது சிங்கள இராணுவத்தின் மாற்றமுடியாத குணவியல்பு மட்டக்களப்பிலும் இதுநடைபெறுகிறது. நிச்சயமாக யாழ்ப்பாணத்திலும் இது நடைபெறும். எனவே யாழ்ப்பாணத்தில் நிரந்தர அமைதி திரும்பிவிட்டது சமாதானம் நிலவுகிறது எனச் சிங்கள அரசு மேற்கொள்ளும் பிரசாரத்தில் எவ்வித உண்மையுமில்லை என்பதை நாம் எமது மக்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

## மக்கள் சரியான - துணிவான - முடிவை எடுப்பார்கள் என நம்புகிறோம்

இன்றைய நாட்கள் மிகவும் சோதனைகளும் வேதனைகளும் நிறைந்தவை. ஈவிரக்கமற்ற எதிரியின் இனவாத ஒடுக்குதலால் இந்நாட்களில் எமது மக்களின் இருப்பிற்கே பெரும் அச்சுறுத்தல் எழுந்துள்ளது. இன்றைய நாட்களில் என்றுமில்லாத பெரும் நெருக்குவாரங்களுக்கு எமது மக்கள் ஆளாகி நிற்கிறார்கள். சிங்களப் பேரினவாத அரசுக்கு அடிபணிந்து, தலை குனிந்து, அடிமைகளாக வாழ்வதா அன்றி துன்பச் சிலுவையைச் சுமந்து கொண்டும் சுதந்திர மனிதர்களாக கௌரவமாக வாழ்வதா என்ற ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு இன்றைய நாட்களில் எமது மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட வாழ்க்கை நலனுக்கும் சுகபோகங்களுக்கும் அப்பால் எமது இனத்தின் எமது தேசத்தின் நல்வாழ்வும் விடிவுமே உன்னதமானது என்பதை உணர்ந்து எமது மக்கள் சரியான முடிவை துணிவான முடிவை எடுப்பார்கள் என்பதில் எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# மக்கள் பட்டினி போடப்படுவதற்கு செஞ்சிலுவைச் சங்கம் கண்டனம்

கொழும்பு, டிச. 15

ஆயுத மோதல்களின்போது அப்பாவிக் குடிமக்களை பட்டினி போட்டு வதைக்க மேற்கொள்ளப்படும் பிரயத்தனங்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வன்மையாகக் கண்டித்துள்ளது.

குடிமக்கள், அவர்களுக்குரிய தேவைகளை பெற்றுக்கொள்ள ஏதுவாக சூழ்நிலைகளைப் பேணுவது அவசியம் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்கு மேலும் கேட்டுள்ளது.

ஜெனிவாவில் நடந்த சர்வதேச மாநாட்டில் இந்தக் கோரிக்கையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு விடுத்தது. (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 15-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org